# புகைப்பட கண்காட்சி ஒத்திவைப்பு

**சென்னை, ஆக.17:** வடபழனி மெட்ரோ ரயில் நிலையத்தில் ஆகஸ்ட் 19-ஆம் தேதி முதல் 25-ஆம் தேதி வரை நடைபெறவிருந்த புகைப்பட கண்காட்சி ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

உலக புகைப்பட தினம் ஞாயிற்றுக்கிழமை (ஆக.19) கொண்டாடப்படுகிறது. இதையொட்டி, வடபழனி மெட்ரோ ரயில் நிலையத்தில் ஞாயிற்றுக்கிழமை தொடங்கி வரும் 25-ஆம் தேதி வரை புகைப்பட கண்காட்சி நடத்த திட்டமிடப்பட்டிருந்தது.

இந்நிலையில், முன்னாள் பிரதமர் வாஜ்பாய் மறைவை அடுத்து கண்காட்சி ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாக மெட்ரோ ரயில் நிர்வாகத்தின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.